பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

29 11 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள பெஞ்சல் புயல் நாளை பிற்பகல் புதுச்சேரி அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2. வடகடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும், நாளையும் கனமுதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3. மாநிலங்களின் காவல்துறை தலைவர்கள் பங்கேற்றுள்ள 3 நாள் மாநாட்டினை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புவனேஷ்வரில் தொடங்கிவைத்தார்.

4. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு காவல்துறை சுதந்திரமாக செயல்பட திமுக அரசு அனுமதிக்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் சற்றுமுன் செய்தியாளர்களிடம் பேசிய அவர், **Fenjal** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புயல், நாளை பிற்பகல் புதுச்சேரி அருகே கரையை கடக்கக்கூடும் என்றார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (1) – 85 செகண்ட்ஸ்)*

புயல் கரையை கடக்கும்போது சூறாவளி காற்று 90 கிலோமீட்டர் வேகம் வரை வீசக்கூடும் என்றும் திரு பாலச்சந்திரன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (2) – 23 செகண்ட்ஸ்)*

இதனிடையே, திருவாரூர் மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக வயல்களில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்றும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 28 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

மாநிலங்களின் காவல்துறை தலைவர்கள் பங்கேற்றுள்ள மூன்று நாள் மாநாட்டினை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புவனேஷ்வரில் தொடங்கிவைத்தார்.

இந்த மாநாட்டில் நாளை பங்கேற்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் நிறைவுரையாற்றுகிறார்.

<<<<<>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முடக்குவது கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு **Krishan Pal Gurjar** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நான்கு நாட்களாக அவை நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெறுவதே ஜனநாயகத்திற்கான கோட்பாடு என்று குறிப்பிட்ட அவர், விவாதங்களில் பங்கேற்காமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு செயல்படுவது தவறானது என்றார்.

எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் திரு **Krishan Pal Gurjar** தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு இயக்கம் 64 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அனைவருக்கும் தரமான சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதே இந்த இயக்கத்தின் நோக்கம் என்று கூறினார்.

இந்த இயக்கத்தின்கீழ், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் தமிழகம் உட்பட 23 மாநிலங்களில் உள்ள 40 சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான 3 ஆயிரத்து 295 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சமூக வலைதளத்தில் இதுகுறித்த விவரங்களை பதிவு செய்துள்ள மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், இந்த திட்டத்தின்கீழ், மகாபலிபுரத்தில் உள்ள நந்தவன பாரம்பரிய பூங்கா 93 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், நீலகிரி மாவட்டம் தேவாலாவில் உள்ள மலர் பூங்கா 70 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், இதனை கட்டுப்படுத்த திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள முன்னாள் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு விஜயபாஸ்கர், காய்ச்சல் பாதிப்பு எட்டு முதல் 10 நாட்களுக்கு நீடிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மாநில அரசு விரிவான கள ஆய்வினை நடத்தி, உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தாதது கவலை அளிப்பதாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

இதுகுறித்து வல்லுநரை கொண்ட குழு அமைத்து காய்ச்சலை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு விஜயபாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு காவல்துறை சுதந்திரமாக செயல்பட திமுக அரசு அனுமதிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே ஒரு வீட்டில் மூன்று பேர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தவறியதே இதுபோன்ற சம்பவங்களுக்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினரையும், அரசை விமர்சிப்பவர்களையும் கைது செய்வதற்கு மட்டுமே காவல்துறையை பயன்படுத்தாமல், பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் சேவை பெறும் உரிமைச்சட்டத்தை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மற்றும் மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, மாநில அரசின் தலைமை செயலர், அரசுத்துறை அதிகாரிகளுக்கு பல்வேறு வழிகாட்டுதல்கள் வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நோக்கம் வரவேற்கத்தக்கது என்றாலும் அதற்கு உரிய பலன் கிடைக்காது என்று கூறியுள்ளார்.

இதற்கு தீர்வு பொது சேவை பெறும் உரிமைச்சட்டம்தான் என்று கூறியுள்ள திரு ராமதாஸ், இதனை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் ஷாமிலி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் ஆட்சியர் திரு ரத்னசாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

திருவள்ளூர் மாவட்டத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் உபகரணங்களை ஆட்சியர் திரு பிரபுசங்கர் விவசாயிகளுக்கு இன்று வழங்கினார்.

--------------

திண்டுக்கல்லில் எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

----------------

சேலத்தில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

----------------

சிவகங்கை ரயில் நிலையத்தில் தெற்கு ரயில்வேயின் பொது மேலாளர் திரு ஆர் என் சிங் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-17 என்ற செட் கணக்கில் சீனாவின் **Dai Wang** –ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Unnati Hooda** 21-16, 21-9 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Ishika Jaiswal** –ஐ வென்று அரையிறதிக்கு முன்னேறினார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Treesa Jolly – Gayatri Gopichand** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Dhruv Kapila – Tanisha Crasto** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

-----------------

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார்.

இப்போட்டியின் இறுதிச்சுற்று முடிவில் ஏழரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

**<<<<<>>>>>**